அரிசி குடும்ப அட்டைதாரர்கள் – முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு 11,1.2026 வரை

# 1,86 கோடி குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

**சென்னை, ஜன.13–**

**அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் குடும்பங்களுக்கு 11.1.2026 அன்று வரை 24,924 நியாயவிலைக் கடைகளில் உள்ள 1,86,23,426 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ. 5587.02 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது எனவும், 1,39,06,292 வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டுள்ளது எனவும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.**

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் 2026 திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000/ வழங்கப்படும்" எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.1.2026 சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார். மேலும், துணை முதலமைச்சர் அவர்கள் சென்னை, சிந்தாதரிப்பேட்டை TUCS நியாயவிலைக்கடையிலும், அந்தந்த மாவட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் ஆகியோர்களுக்கு 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு 04.01.2026 முதல் 07.01.2026 வரை தொடர்புடைய நியாயவிலைக்கடைப் பணியாளர்களால் வழங்கப்பட்டன. இதில், முதல் நாள் 200 குடும்ப அட்டைத்தாரர்களும், இரண்டாம் நாள் 300 முதல் 400 வரையிலான குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கு ஏதுவாக தொடர்புடைய நியாய விலைக்கடைப் பணியாளர்களால் டோக்கன்கள் விநியோகம் செய்யப்பட்டது. இதற் காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த டிஜிட்டல் மயமான காலகட்டத்தில் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகை ரொக்கமாக வழங்கிட கூட்டுறவுத் துறையின் சிறப்பான திட்டமிடல் மற்றும் தொய்வில்லாமலும், விரைவாக குறைந்த காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை பிற தேசிய வங்கிகள் செய்ய முடியாததை, கூட்டுறவு வங்கி திறம்பட செய்து சாதித்துள்ளது.

11.1.2026 அன்று வரை 24,924 நியாயவிலைக் கடைகளில் உள்ள 1,86,23,426 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ.5587.02 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது எனவும், 1,39,06,292 வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

---

சேலம் மாவட்டத்தில் – 'உங்கள் கனவ சொல்லுங்கள்' திட்டத்தின் கீழ்

# 9.71 லட்சம் குடும்பங்களுக்கான கணக்கெடுப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், ஜன. 13-

முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூரிலிருந்து காணொலி காட்சி வாயிலாக "உங்கள் கனவ சொல்லுங்கள்" திட்டத்தின் கீழ் விரிவான கணக்கெடுப்பு பணியினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து சேலம் மாவட்டம், ஓமலூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பங்கேற்றார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூரிலிருந்து காணொலி காட்சி வாயிலாக "உங்கள் கனவை சொல்லுங்கள்" திட்டத்தின் கீழ் விரிவான கணக்கெடுப்பு பணியினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், எம்.ஆர்.பி முத்து மஹால் எதிரில் அமைந்துள்ள மைதானத்தில், இந் நிகழ்ச்சி சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு வரலாற்று நிகழ்வாக "உங்கள் கனவை சொல்லுங்கள்" என்ற திட்டத்தினை அறிவித்து இன்றயை தினம் 09.01.2026 திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி ஊராட்சியில் தொடங்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், தமிழ்நாடு அரசால் பயன்பெற்ற திட்டங்கள், பயன்பெற்றதிட்டங்களில் குடும்பத்தினர் மிகவும் பயனுள்ளதாக கருதும் மூன்று திட்டங்கள் மற்றும் 2030 ஆம் ஆண்டிற்குள் அரசு பூர்த்தி செய்ய வேண்டிய முதன்மையான மூன்று தேவைகளை (திட்டங்கள்) கணக்கெடுப்பு படிவம் மூலம் பெற்று இதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மொபைல் ஆப் மூலம் தன்னார்வலர்கள் கொண்டு பதிவு செய்து அதன் அடிப்படையில் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் பிரத்யேக 'கனவு அட்டை" வழங்கப்படும்.

இதன் மூலம் ஊரக மற்றும் நகரப்புற பகுதி குடும்பங்களின் தேவைகளை அறிந்து தொலைநோக்கு அறிக்கை (Vision Document) தயார் செய்யப்பட்டு, அதன்படி தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள 6.50,560 குடும்பங்களிலும், நகரப் பகுதிகளில் 3,20.685 குடும்பங்களிலும் மொத்தம் 9.71.265 குடும்பங்களுக்கான கணக்கெடுப்பு இன்று துவங்கி 31.01.2026 வரை நடைபெறும். இதற்கென நியாய விலைக் கடை வாரியாக 2,315 தன்னார்வலர்கள் மற்றும் 629 மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.


இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் ஓமலூர் வட்டம், கோட்ட மேட்டுப்பட்டி ஊராட்சி, அண்ணா நகர் பகுதியில் தன்னார்வலர்களுடன் இணைந்து "உங்கள் கனவை சொல்லுங்கள்" திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு படிவங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) விவேக் யாதவ், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் மா. ஜெய் கணேஷ் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# மிரட்டல்!



**"தன் வசமுள்ள விசாரணை அமைப்புகளைக் காட்டி**
**கட்சிகள் மற்றும்**
**அதன் தலைவர்கள்**
**தொண்டர்களின்**
**விருப்பங்களுக்கு**
**மாறான கூட்டணி!**
**முடிவெடுக்க மிரட்டும்**
**அரசியலை நாட்டின்**
**உள்துறை அமைச்சர்**
**தமிழ்நாட்டில் முகாமிட்டு**
**மேற்கொண்டு வருவதை**
**மக்கள் கவனிக்கிறார்கள்...**

**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்



---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**செங்குன்றம் மிசா இரா. ஏழுமலை**
**சனவரி 13 (2005)**



**கழக துவக்கக் காலத்திலிருந்தே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பொதுக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார்.**

**நாரவாரிக்குப்பம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும் – பேரூராட்சித் தலைவராகவும் பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்ற இவர், நெருக்கடிக் காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**"சட்டமன்றத்தில் இடம் கிடைக்காவிட்டாலும், கலைஞர் இதயத்தில் எப்பொழுதும் ஏழுமலை அவர்களுக்கு இடமுண்டு." என்று பொதுச்செயலாளர் பேராசிரியரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# எங்க கனவ சொல்லுறோம்!



வாய் நிறையும் புன்னகை
வயிறு நிறையும் காலை உணவு
அறிவு நிறையும் நூலகங்கள்
கல்வி நிறையும் புதுமைப் பெண்
வாழ்க்கை நிறையும்
உரிமைத் தொகை
சந்தோஷம் நிறையும் விடியல் பயணம்

வெற்றி நிறையும்
நான் முதல்வன்

ஆரோக்யம் நிறையும் கலைஞர்
நூற்றாண்டு மருத்துவமனை

மனசு நிறையும் கோயில்கள்

இத்தனையும் தருகின்ற
திராவிட மாடல் முதல்வர் ஆட்சிதான்
மீண்டும் வேண்டும்
எப்போதும் வேண்டும்
இன்னும் பல
நூறாண்டுக்கும்
வேண்டும்!

**கவிஞர்**
**ஆண்டாள்**
**பிரியதர்ஷினி**



---

ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ் பங்கேற்பு!

# திருத்துறைப்பூண்டி தொகுதியில் நலத்திட்டப்பணிகள்!

## பூண்டிகே.கலைவாணன் பங்கேற்று தொடங்கிவைத்தார்!

திருவாரூர், ஜன.13-

திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்துறைப்பூண்டி கொற்கை பகுதியில் 4.54 லட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் திறப்பு, புதிய பேருந்து வழித்தடம், என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குசாவடி தமிழ்நாடு தலைகுனியாது வாக்குசாவடி முகவர்கள் கூட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்று துவக்கி வைத்தார். ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி தொகுதி கொற்கை பகுதியில் ஊராட்சி மன்ற தலைவர் நிதியிலிருந்து 4.54 லட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி நடைபெற்று முடிந்த நிலையில் திறப்புவிழா நிகழ்வு நடைபெற்றது. விழாவிற்கு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் க.பா.ஜானகிராமன் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் வரவேற்புரையாற்றினார். நிகழ்வில் மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு புதிய பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அரசு போக்குவரத்து கழகத்தின் மூலம் கொற்கை பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பேருந்து புதிய வழித்தடத்தில் இயக்கப்பட்டது. இந்த நிகழ்வினை திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொண்டு கொடி அசைத்து வைத்து புதிய பேருந்து வழித்தடத்தை துவக்கி வைத்தார்.

கொற்கை ஊராட்சி பொதுவிநியோக அங்காடியில் தமழ்நாடு முதல்வரின் பொங்கல் பரிசு வழங்கும் நிகழ்வில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பை வழங்கினார். பின்னர் நடைபெற்றகொற்கை ஊராட்சியின் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குசாவடிதமிழ்நாடு தலைகுனியாது வாக்குசாவடி முகவர்கள் கூட்டத்தில் பங்கேற்ற பூண்டி.கே. கலைவாணன் வாக்குசாவடி முகவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கினார்.

நிகழ்வுகளில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.பிரகாஷ், துணைச் செயலாளர் சேது.முருகானந்தம், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் ராமகிருஷ்ணன், இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கடேஷ்,வழக்கறிஞர் ரமேஷ், தலைமைக்கழக பேச்சாளர் முஸ்தாக் , மதியழகன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் க.பா. ஜானகிராமன், வடிவேல், இளங்கோவன், வீரசேகரன், வசந்தன், வேதாரத்தினம், பாமணி பாலு, முத்தரசன் மற்றும் பொதுமக்கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



குடவாசல் ஒன்றியம் பெரும்பண்ணையூர் 150ஆண்டுகளுக்கு முற்பட்ட கிறிஸ்தவ தேவாலயத்தை புதுப்பிக்க தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டுகோடி நிதி ஒதுக்கியமைக்கு அப்பகுதி மக்கள் நன்றிதெரிவித்த நிகழ்வில் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் பங்கேற்றார். உடன் ஒன்றிய செயலாளர் பா.பிரபாகரன், சார்பு அணி நிர்வாகிகள் ஆர்.காசிராஜன், விமலா பாலு, ஆலய பங்குத்தந்தை சேவியர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.